

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான .மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.10.2025) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சி, இளையரசனேந்தல் சாலையில் புதிதாக நூலக வசதியுடன் கட்டப்பட்டுள்ள கோவில்பட்டி நகரக் கழக அலுவலகத்தை திறந்து வைத்து, அவ்வலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையினையும் திறந்து வைத்தார்



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.10.2025) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சி, இளையரசனேந்தல் சாலையில் புதிதாக நூலக வசதியுடன் கட்டப்பட்டுள்ள கோவில்பட்டி நகரக் கழக அலுவலகத்தை திறந்து வைத்து, அவ்வலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையினையும் திறந்து வைத்தார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.10.2025) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சி, இளையரசனேந்தல் சாலையில் புதிதாக நூலக வசதியுடன் கட்டப்பட்டுள்ள கோவில்பட்டி நகரக் கழக அலுவலகத்தை திறந்து வைத்தார்.

### தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி நகராட்சி – இளையரசனேந்தல் சாலையில்

# கோவில்பட்டி நகரக் கழக அலுவலகம் - கலைஞர் முழு உருவ வெண்கலச் சிலை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

கோவில்பட்டி, அக்.29-

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.10.2025) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சி, இளையரசனேந்தல் சாலையில் புதிதாக நூலக வசதியுடன் கட்டப்பட்டுள்ள கோவில்பட்டி நகரக் கழக அலுவலகத்தையும், அவ்வலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையினையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், திருமதி பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர் ராஜா, ரகுராம், திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் கிரகாம்பெல், தூத்துக்குடி மாநகராட்சி மேயர்

ஜெகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்.இராதாகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் (கோவில்பட்டி மேற்கு) எஸ்.பாலமுருகன், கோவில்பட்டி மத்திய ஒன்றிய கழக செயலாளர் பீக்கிலிபட்டி வீ.முருகேசன், கோவில்பட்டி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.ஜெயக்கண்ணன், கோவில்பட்டி மத்திய ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ. சந்திரக்கண்ணன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.10.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா அவர்கள், ஆஸ்திரேலியா நாட்டின் பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டம் (PATCA) அமைப்பின் சார்பில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள மாநாட்டில் மனிதநேயம் மற்றும் சமூக ஒற்றுமை தலைப்பில் உரையாற்றவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### தமிழ்நாட்டில் விவசாயிகளின்

# உரத் தேவையைப் பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜே.பி.நட்டாவுக்கு கடிதம்!

**சென்னை, அக் 29 -**

**தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு உரத் தேவையை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கோரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா** அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் நடப்பு சம்பா (ரபி) பருவத்தில் பயிர் சாகுபடி முழு வீச்சில் நடைபெற்று வரும் நிலையில், உரங்களை உரிய நேரத்தில் வழங்குவதை சம்பந்தப்பட்ட உர நிறுவனங்கள் உறுதி செய்திடத் தேவையான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கோரி ஒன்றிய இரசாயனம், உரங்கள், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களை வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28 102025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்தியப் பிரதமரிடம் தான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாட்டிற்கு, 2025 குறுவை (காரீஃப்) பருவத்திற்குப் போதுமான உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அந்த வகையில், 2025 குறுவை (காரீஃப்) பருவத்திற்கு முறையே 4.41 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.75 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 0.95 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 4.58 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்கள் ஒதுக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு 4.37 இலட்சம் மெட்ரிக் டன் (99%) யூரியா, 1.59 இலட்சம் மெட்ரிக் டன் (91%) டி.ஏ.பி., 0.70 இலட்சம் மெட்ரிக் டன் (74%) எம்.ஓ.பி. மற்றும் 3.70 இலட்சம் மெட்ரிக் டன் (81%) என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களைப் பெற்றுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நெல் விவசாயிகளுக்கு ரூ.215 கோடி செலவில் "குறுவை (காரீஃப்) சிறப்புத் தொகுப்பு" அறிவித்து செயல்படுத்தியது மற்றும் நீர்ப்பாசனத்திற்காக அணைகளை உரிய நேரத்தில் திறந்தது போன்ற மாநில அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளால், தமிழ்நாடு நெல் உற்பத்தியை சாதனை அளவிற்கு அதிகரிக்க முடிந்ததாகவும் அவர் பெருமிதத்துடன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் 16, 2025 அன்று தொடங்கி யுள்ளதாலும், அனைத்து முக்கிய நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் இருப்பதாலும், சம்பா பருவத்தில் அதிகபட்ச நெல் சாகுபடி பரப்பளவில் உற்பத்தி செய்திட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நவம்பர் மாதத்தில் உரங்கள், குறிப்பாக யூரியாவின் தேவை அதிகரிக்கும் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில், சம்பா நெல் பரப்பளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், கூடுதலாக, மக்காச் சோளம், உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை மற்றும் கரும்பு போன்ற பிற பயிர்களின் சாகுபடியும் மாநிலம் முழுவதும் முழு வீச்சில் நடைபெற்று வருவதாகவும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, இந்திய அரசின் உரத் துறை, மாநிலத்தால் முன்மொழி யப்பட்ட 6.94 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.93 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 1.88 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 5.15 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களில், 6.50 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.50 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 1.80 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 5.14 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களை ஒதுக்கியுள்ளது என்றும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

நடப்பு சம்பா (ரபி) பருவத்தில் பயிர் சாகுபடி பல்வேறு சாதகமான காரணிகளால் முழு வீச்சில் நடைபெற்றுவரும் நிலையில், நேரடி உரங்களுக்கான தேவை குறிப்பாக, யூரியாவுக்கான தேவை வரும் நாட்களில் பெருமளவில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படு வதாகக் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தால் முன்மொழியப்பட்ட 6.94 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.93 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 1.88 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 5.15 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களின் தேவையை, சம்பந்தப்பட்ட உர நிறுவனங்கள் உரிய நேரத்தில் பரிசீலித்து, வரும் மாதங்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஒன்றிய இரசாயனம், உரங்கள், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நெல் கொள்முதல் — நகர்வுப் பணிகள் துரிதமாக நடைபெற்று

### 1,45,634 விவசாயிகளுக்கு ரூ.2709 கோடி வழங்கப்பட்டுள்ளது!

# குறுவைப் பருவத்தில் 11.21 இலட்சம் டன் நெல் கொள்முதல்!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

**சென்னை, அக். 29 -**

**குறுவைப் பருவத்தில் 11.21 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் மற்றும் நகர்வுப் பணிகள் துரிதமாக நடைபெற்று 1,45,634 விவசாயிகளுக்கு 2709 கோடி ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளது என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு : -

முதலமைச்சர் அவர்கள் இருமுறை ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி நெல் கொள்முதல் பற்றி விரிவான அறிக்கையையும் வெளியிட்டிருந்தார்கள்.

• வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை!

• உரிய காலத்தில் காவிரி நீர் திறப்பு!

• இரண்டரை இலட்சம் விவசாயிகளுக்குப் புதிய இலவச பம்ப்செட் இணைப்புகள்!

• தமிழ்நாடு அரசின் ஊக்கத் தொகையுடன் நெல் குவிண்டால் ஒன்றுக்கு சன்னரகத்திற்கு ரூ. 2545/ பொதுரகத்திற்கு ரூ. 2500/!

• வரலாறு கண்டிராத குறுவை சாகுபடி 6.13 இலட்சம் ஏக்கர்!

• நெல் கொள்முதல் பருவம் அக்டோபர் முதல் நாளுக்குப் பதிலாக செப்டம்பர் முதல் நாளிலிருந்து நெல் கொள்முதல் செய்ய பிரதமர் அவர்களிடம் கடிதம் எழுதி ஒன்றிய அரசிடம் ஒப்புதல் பெற்று கடந்த நான்காண்டுகளாக நெல்லைப் பெருமளவில் மழையிலிருந்து காத்தது நம்முடைய முதல்வர் அவர்கள்!

• 576.2 கோடி ரூபாயில் வேளாண் இயந்திரங்கள்!

• வேளாண் வளர்ச்சி 5.66% !

• நெல் சேமித்திட 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் மேற்கூரையிட்ட சேமிப்புத் தளங்கள் புதிதாகக் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன!



• 3.40 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் புதிய மேற்கூரையிட்ட சேமிப்புத் தளங்கள் கட்டப்பட உள்ளன!

• 2011 - 2021 வரை 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் நெல் கொள்முதல் செய்யப்பட்டதை விட 54 மாதங்களில் தி.மு.க ஆட்சியில் 16 இலட்சம் டன் நெல் அதிக கொள்முதல் செய்யப்பட்டது!

• ஈரப்பதத்தை உயர்த்திட ஒன்றிய அரசு குழுக்கள் ஆய்வு செய்து வருகின்றன!

• 24.10.2025 ஒரே நாளில் இரயில்கள் மூலம் 21000 மெட்ரிக் டன் நெல் நகர்வு செய்யப்பட்டது வரலாற்றுச் சாதனையாகும்!

• கடந்த ஆண்டைக் காட்டிலும் இரண்டே கால் மடங்கு அதிகம் இரயில்கள் மூலம் நகர்வு!

அனைத்து வகைகளிலும் வேளாண் பெருங்குடி மக்களுக்குப் பணியாற்றி குறிப்பாக மண்ணின் மைந்தர் என்ற வகையில் டெல்டா விவாசயிகளுக்கு அரும்பணியாற்றி வரும் நம் முதல்வர் அவர்களை முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் என இந்தியத் திருநாடே பாராட்டி வருகிறது.

2020-2021 குறுவைப் பருவம் முழுமைக்கும் சேர்ந்தே 5.74 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் நம் தலைவரின் ஆட்சியில்

2025 - 2026 குறுவைப் பருவத்தில் 58 நாட்களில் மட்டும் 11.21 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வேளாண் துறையின் மதிப்பீட்டின்படி செப்டம்பர் மற்றும் அக்டோபரில்

11.07 இலட்சம் டன் நெல் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 28.10.2025 பிற்பகல் வரை 11.21 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக 1872 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

நாளொன்றுக்கு 30 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு மேல் நெல் கொள்முதல் செய்வதையும் டெல்டா மாவட்டங்களிலிருந்து இரயில் வேகன்கள் மற்றும் லாரிகள் மூலமாக அதை மற்ற மாவட்டங்களுக்கு நகர்வு செய்யப்பட்டு வருவதையும் அறிந்து கொள்ளாமல் சில அரசியல் கட்சித் தலைவர்களும், நிலைமையின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ளாத சிலரும் தேவையின்றிக் குறை கூறி வருகின்றனர்.

நெல் கொள்முதலில் சிரத்தையுடன் செய்யும் கழக அரசு பணிகள் பற்றி நெல் விவசாயிகளுக்கு, குறிப்பாக டெல்டா விவசாயிகளுக்கு நன்கு தெரியும். ஆதலால் தேவையற்ற குறைகளைக் கூறாமல் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினால் சிறப்பாக இருக்கும். "போற்றுபவர் போற்றட்டும்; புழுதுவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; என் கடன் பணி செய்வதே" என்ற உணர்வோடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நெல் கொள்முதல் உள்ளிட்ட மக்கள் பணிகளைத் தொய்வின்றிச் செய்வோம்!

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.